திரு. கே. வி. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, 'குங்குமம்' பத்திரிகையில் வேண்டுமென்றே இந்த மாமன்றத்தையும், முதலமைச்சரையும் அவமானப்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு கார்ட்டூன் போடப்பட்டு இருக்கிறது. அது இந்த மாமன்றத்தின் உரிமையை மீறுவதாகக் கருதி, அதை நான் உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வருகிறேன். உரிமைக் கமிட்டிக்கு அதை அனுப்பி பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுப்பியுள்ள பிரச்னை பத்திரிகை மீது என்பதால், அதற்கான விளக்கத்தை அந்த ஆசிரியருக்கு எழுதிக்கேட்டு, அதன் பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

(ஆ) ''முரசொலி'' நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள கருத்துப்படம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்னை குறித்து, டாக்டர் கே. சமரசம் அவர்கள் 23—2—1978 ஆம் தேதியிட்ட 'முரசொலி' நாளிதழ் மீது, அது வெளியிட்டுள்ள ஒரு கார்ட்டூன் குறித்து அவை உரிமை மீறல் பிரச்னை எழுப்ப அனுமதி கேட்டு இருக்கிறார்கள். அவருக்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

(முற்பகல் 9-50)

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, 23—2—1978 ஆம் தேதிய ''முரசொலி'' நாளிதழில் ஒரு கார்ட்டூன் படம் வந்திருக்கிறது. அதிலே, ''எங்கள் ஊருக்கு இரண்டு பள்ளிகள் வேண்டும்—உறுப்பினர்கள்'' என்று படம் போட்டிருக்கிறார்கள். ''இதோ தந்துவிடுகிறேன்'' என்று அமைச்சர் சுவரொட்டியில் இருக்கிற பல்லிகளைக் கொடுக்கக்கூடியதாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குத் தலைப்பு ''பள்ளிகள் படும் பாடு'' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் நடைபெறுகின்ற விவாதங்களை இழிவுபடுத்தும் முறையிலே அந்த கார்ட்டூன் இருக்கிறது. ஆகவே, இது அவை உரிமையை மீறிய செயலாக இருக்கிறது என்று கூறி அதற்கு தங்களின் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் பத்திரிகை குறித்த உரிமைப் பிரச்சினையாக இருப்பதால், சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு எழுதி, விளக்கம் கேட்டு என்னுடைய தீர்ப்பை பின்னர் தெரிவிக்கிறேன்.